72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

# PRESS RELEASE

### திகதி வரை தடையாணை

திகதி : 16 July 2024
நேரம் : 11:00 AM Sri Lanka Time

### மேலும் தகவல்களுக்கு அணுகவும்

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல்: info ‘at’ ihp.lk


### பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at’ ihp.lk Twitter: @ravirannaneliya

# இலங்கை நுகர்வோர் நம்பிக்கை: ஜூன் 2024ல் நுகர்வோர் நம்பிக்கை அதிகரித்து இதுவரை எட்டாத உச்சத்தை அடைந்தது

## *மூன்று சுட்டெண்களும் நம்பிக்கையற்ற மட்டத்தில் தங்கியுள்ளன*

இலங்கை சுகாதார கொள்கை நிறுவனம் (IHP) தன் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின்(SLOTS) மூலம் கணிக்கும் நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்களின் ஜூன் 2024 புதுபிப்பை இன்று வெளியிட்டது.



ஜூன் 2024ல் IHPன் மூன்று நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்களும் அதிகரித்தன. பொதுமக்களுக்கு அவர்களின் தனிப்பட்ட பொருளாதார நிலை மற்றும் தேசிய பொருளாதார எண்ணம் பற்றிய பரந்த அளவீடான நுகர்வோர் எண்ணம் சுட்டெண்(ICS) 7 புள்ளிகளால் உயர்ந்து 36 புள்ளிகள் ஆனது. எதிர்காலத்தைப்பற்றிய அபிப்பிராயத்தை அளவிடும் நுகர்வோர் எதிர்பார்ப்பு சுட்டெண்ணும் (ICE), 7 புள்ளிகளால் உயர்ந்து 40 புள்ளிகள் ஆனது. மேலும், தற்போதைய நிலவரம் பற்றிய எண்ணத்தை அளவிடும் தற்போதைய நிலவர சுட்டெண்(ICC), 6 புள்ளிகள் உயர்ந்து 30 புள்ளிகள் ஆனது. 2021முதல் பதிவுசெய்யப்பட்ட சுட்டெண்களில் இதுவே அதிகமானது.

தற்போதைய கொள்வனவு நிலவரம் பற்றிய அளவீடு, ஜூன் மாதத்தில் 29 புள்ளிகளுடன் ஒரு புதிய உச்சத்தை அடைந்தது, நுகர்வோரின் கொள்முதல் தேவை அதிகரித்தை காட்டுகின்றது.

அனைத்து IHP SLOTS நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்களின் வீச்சும் பூஜ்ஜியத்திலிருந்து அதிகபட்சம் 100 வரை. மேலும், மட்டம் 50ற்கு கீழ் சுட்டெண் காணப்பட்டால், அது நிகர நம்பிக்கையின்மை நிலையை அதாவது அவநம்பிக்கை நிலையை குறிக்கும்.

நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்(CCI) மதிப்பீடுகள், ஜூன் 2024ல் தொலைபேசி மூலம் நடத்தப்பட்ட 447 நேர்காணல்களை உள்ளடக்கிய, அக். 21, 2021 – ஜூலை 7, 2024 வரை ஆய்வு செய்யப்பட்ட 17,179 வயது வந்தோரின் பதில்களைக் கொண்டு மதிப்பிடப்பட்டன. பதிலளித்தவர்களின் விகிதத்தை பொருத்து சுட்டெண்களுக்கு இடையே மாதிரியின் அளவு மாறுபடும். அனைத்து சுட்டெண்களும், பாலினம், வயது, இனக்குழு மற்றும் பொருளாதார நிலை போன்ற பண்புகள் உள்பட, தேசிய சனத்தொகையை பிரதிநிதித்துவப்படுத்துமாறு சரிசெய்யப்பட்டன.

SLOTS இயங்குதளமானது, நேரடி நேர்காணல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பெரிய தேசிய தொகுதியான (Panel) பதிலளிப்பவர்கள் மற்றும் எழுமாறாக டயல் செய்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் மூலம் பொதுக் கருத்து மற்றும் நல்வாழ்வு போக்குகளை தினசரி கணிப்பிடுகின்றது. சக ஆய்வாளர்கள் பலரால் மதிப்பாய்வு செய்யப்பட்ட அறிவியல் வெளியீடுகள் இந்த தரவுகளைப் பயன்படுத்துகின்றன. குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பான போக்குகளை தொடர இந்த இயங்குதளத்தை பயன்படுத்துவது தொடர்பான விசாரணைகளை வரவேற்கின்றோம். தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் info `at’ ihp.lk யை அனுகவும்.

## மேலும் விவரங்கள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, July 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence increased and reached an all-time high in June 2024”. *Available at: https://ihp.lk/research-updates/cciupdate202406*

Institute for Health Policy, July 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence increased and reached an all-time high in June 2024”, SLOTS Report #2024-09. *Available at: https://ihp.lk/sites/default/files/research-updates/SLOTSReport202409.pdf*

## முன் வெளிவந்த அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, June 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence marginally changed in May 2024 compared to the previous month”, SLOTS Report #2024-06. *Available at: https://ihp.lk/sites/default/files/research-updates/SLOTSReport202406.pdf*

Institute for Health Policy, April 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence surged to a new peak in March 2024”, SLOTS Report #2024-04. *Available at: https://ihp.lk/sites/default/files/press-release/SLOTSReport202404.pdf*

Institute for Health Policy, March 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence improved in February 2024”, SLOTS Report #2024-03. *Available at: https://ihp.lk/sites/default/files/press-release/SLOTSReport202403.pdf*

Institute for Health Policy, February 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence continued to decline in January 2024”, SLOTS Report #2024-02. *Available at: https://ihp.lk/sites/default/files/press-release/SLOTSReport202402.pdf*

Institute for Health Policy, January 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence improved marginally in December ’23”, SLOTS Report #2024-01. *Available at: https://ihp.lk/sites/default/files/press-release/SLOTSReport202401.pdf*

Institute for Health Policy, March 2022, “SLOTS Consumer Confidence Survey: Methodology for tracking consumer sentiment in Sri Lanka”, SLOTS Report #2022-01. *Available at:* https://ihp.lk/publications/docs/SLOTSReport202201.pdf

## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## முறை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தோரின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காணல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. அனைத்து நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்களின் மதிப்பீடுகளும், வயது, பாலினம், மாகாணம், துறை, சமூகபொருளாதார நிலை, இனக்குழு, மற்றும் கல்வி போன்ற பண்புகள் உள்பட தேசிய சனத்தொகையை பிரதிநிதித்துவப்படுத்தமாறு எடையிடப்பட்டன.

## நிதியுதவி

முன்பு SLOTS ஆய்விற்கு நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் நிதி வழங்கினர். தற்போதைய கள வேலைகளுக்கு நிதி IHPன் பொது நல ஆய்வு நிதி மற்றும் பிறரால் வழங்கப்படுகின்றது. ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் கருத்துகள் அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.